**மினிபே பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குண்டசாலை பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குண்டசாலை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய தினசரி தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழ் காட்டப்படும் தேவைகள் தொடர்பில் விஷேட நிதி ஒதுக்கீடு உட்படும்.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்படும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைகளுக்கமைய முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்படல் வேண்டுமென நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுககளை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பில்ஹக மயானத்தில் அமைந்துள்ள காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) 2020 சனவரி 16 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 180,000 பெறுமதியான புல்வெட்டும் இயந்திரம் (Rotary Slasher) நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.2. இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்கு அல்லது அறிக்கை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 59,598,498 ஆன 03 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் பயன்பாட்டு அட்டவணைகளில் காணப்படும் மீதிகளுக்கு இடையே ரூபா 2,082,649 ஆன வேறுபாடு காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் ரூபா 95,074,409 பெறுமதியான 11 காணி மற்றும் கட்டிடங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் ரூபா 92,037,016 என காண்பிக்கப்பட்டமையால் ரூபா 6,043,288 ஆன வேறுபாடு காணப்பட்டது. | வேறுபாடு தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு எதிர்காலத்தில் உங்களுக்கு அறிக்கையிடுகின்றேன். | எதிர்வரும் ஆண்டில் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பட்டோலைகள் மற்றும் உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 7,051,397 ஆன 5 கணக்கு விடயங்களை திருப்திகரமாக திருப்திகரமாக உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | தீர்வுசெய்ய முடியாத மீதிகளை பொதுச் சபை அங்கீகாரத்துடன் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதுடன் ஏனைய கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு அட்டவணைகளை தயாரித்து சமர்ப்பிக்கின்றேன். | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7. இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571(2) | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டின் வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதிலும் ரூபா 1,701,577 ஆன 28 வைப்புக்கள் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | ஈக்கஜறபாடுகளை சீராக்கி உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன். | நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 11,225,811 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,316,477 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீத வரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டின் சனவரி 01 இல் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,134,608 ஆன நிலுவை வீதவரி மீதியில் ரூபா 1,012,335 மற்றும் மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 1,333,672 ஆன வீதவரி பெறுமதியில் ரூபா 685,033 என மொத்தம் ரூபா 1,697,368 அறவிடப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருமான பரிசோதகர் பதவி வெற்றிகளாக இருத்தல் மற்றம் மார்ச் மாதத்தில் உலகம் பூராகவும் காணப்பட்ட கொவிட் தொற்று நிலைமை காரணமாக வருமான சேகரிப்பு முன்னேற்றம் மந்த கெதியில் காணப்பட்டன. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **கடை வாடகை** | | |
| **(i)** | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 6,907,199 ஆன கடை வாடகை மீதியில் ரூபா 6,811,673 மற்றும் மீளாய்வாண்டில் பட்டியலிட்ட ரூபா 2,665,865 ஆன கடை வாடகை பெறுமதியில் ரூபா 2,331,193 என மொத்தம் ரூபா 9,142,866 அறவிடப்பட்டிருக்க வில்லை. | சபைக்கு சொந்தமான வியாபார நிலையங்களில் அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காகவழக்கு தொடருவதற்கு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2015 செப்தம்பர் 04 ஆந் திகதி வழக்கு தீர்ப்பு மூலம் 2008 ஆம் ஆண்டிலிருந்து மணல் அல்லுமடங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 81,949 ஆன மீதியை அறவீடுவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரை அதில் ரூபா 71,933 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை தொகை கொடுப்பனவு தொடர்பாக மேலும் தாமதித்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி நிலுவை வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(இ) **ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட நீர் கட்டண நிலுவையில் ரூபா 1,550,686 தொகையும் பட்டியலிடப்பட்ட வற்றில் ரூபா 1,928,437 தொகையும் என மொததம் ரூபா 3,479,122 அறவிடப்பட்டிருக்க வில்லை. | கொவிட் தொற்று நிலைமை குறைந்த பின்னர் நிலுவை வருமானத்தை அறவிட்டு உங்களுக்கு அறிக்கையிடுகின்றேன் | நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 4,277,860 மற்றும் முத்திரை கட்டணங்கள் ரூபா 913,945 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | எஞ்சிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணங்கள் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் போதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 59,078,700 செலவிடப்பட்டு பல்நோக்கு கட்டிடத்தில் பொது நூலகம், தகவல் தொழில்நுட்ப நிலையம், சுகாதார நிலையம், குடும்ப மற்றும் ஆயுர்வேத நிலையம் மற்றும் சனசமூக மண்டபம் என்பவற்றை அமைப்பதற்கு முன்மொழியப் பட்டிருந்த போதும் முதலாம் மாடி அலுவலக வளவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் இக்கட்டிடத்தின் நிலமாடி மற்றும் இரண்டாம் மாடியில் 14000 சதுர அடி அளவில் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | இவ்வாண்டில் அந் இடங்களை வாடகை அடிப்படையில் வழங்கி சபைக்கு வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளேன் | விரைவில் ஆக்கபூர்வமான செயற்பாடொன்றிற்கு பயன்படுத்த வேண்டுமென |

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியன்று நிர்மாணக் கடன்பட்டோர், வீட்டு வாடகை, நீர் கட்டணங்கள், கடை வாடகை மற்றும் அறவிடுவத்குள்ள தண்டப்பணம் போன்ற 5 கூட்டு மீதிகளின் பெறுமதி ரூபா 58,748,541 ஆக இருந்ததுடன் 01 முதல் 05 வருட காலத்திற்கு உட்பட்ட ரூபா 7,655,824 ஆன கணக்கு மீதிகள் மற்றும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 3,005,501 ஆன கணக்கு மீதிகளின் உள்ளடங்கியிருந்த போதும் அம்மீதிகள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியன்று செலுத்த வேண்டிய 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த மொத்தம் ரூபா 800,154 தொகையும் 01 இற்கும் 05 இற்கும் இடைப்பட்ட ரூபா 334,873 தொயையுமாக மொத்தம் ரூபா 47,103,359 ஆன நிர்மாணக் கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்வுசெய்யப்பட்டிருக்க வில்லை. | இம் மீதிகளைப் பரீட்சித்து உங்களுக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும். | தாமதமின்றி தீர்வு செய்வதற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியின் 9 பதவிகளில் 15 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்பு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |